பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 வைகாசி 5 தி. ஆண்டு 11 இதழ் 97
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 19-5-78

தென் இந்திய யாத்திரை
ஆவணி முதல் வாரத்தில்
செல்லும் இடங்கள்
திருச்சி, மதுரை, பாரதிமண்டபம், பாஞ்சாலங்குறிச்சி, கன்னியாகுமரி, திருவனந்தபுரம், குற்றாலம், மைசூர், பெங்களூர், திருப்பதி, சென்னை, இதம்பரம், வேளாங்கண்ணி, ஆறுபடை இன்னும் பல.
ரூபா 875/- மட்டுமே
விபரங்கட்கு:-
சத்தியா றவல்ஸ்
224/A கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

லாலா
சோப்
பிரகாச சலவை!
பளிச்சிடும் வெண்மை!
ஈழம் எங்கும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

# அமிர் கோரிக்கைக்கு பிரதமர்

# பிரேமதாசா மறுப்பு

## 'விடுதலைப் புலிகள் தடைச் சட்டம்மீது சபையில் வாதம்

(கொழும்பு)

**தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அது போன்ற இயக்கங்களையும் தடைசெய்வதற்கான சட்ட மூலமும் குற்றவியல் நடவடிக்கைகள் சிறப்பேற்பாடுகள் சட்டமூலமும் தேசிய அரசுப் பேரவையில் விவாதிக்கப்படுவதை ஒத்திப்போடும்படி எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் பேரவையில் கேட்டுக்கொண்டார். இவைகளின் தாற்பரியங்களை அறிய அவகாசம் தேவையென்று அவர் கூறினார்.**

**ஆனால் இதற்கு இணங்க பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா மறுத்துவிட்டார்.**

**சபையில் இதற்குமுன் பலசந்தர்ப்பங்களில் சட்டமூலங்கள் மீதான விவாதங்கள் எதிர்க்கட்சியினரின் கோரிக்கையின்பேரில் ஒத்திப்போடப்பட்டது: ஆனால் இம்முறை அப்படிச்செய்ய முடியாமலிருக்கிறது என்று திரு. பிரேமதாஸ கூறினார்.**

நேற்று தேசிய அரசுப் பேரவை கூடியபோது பெரும்பாலும் சகல உறுப்பினர்களும் சபையில் பிரசன்னமாய் இருந்தனர். இரு சட்டமூலங்களையும் நீதியமைச்சர் சபையில் சமர்ப்பித்துப் பேசினார். நாட்டில் குற்றங்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. பாரிய குற்றம் புரிந்தவர்கள் சுதந்திரமாக நடமாடுகிறார்கள். குற்றம் புரிவதில் சிக்காகோ நகரையும் மிஞ்சிவிட்டது நாடு என்றார்.

இந்த சட்டங்கள் அவசரமாக விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படவேண்டும் என்பதற்காக சபையின் வழமையான நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்படவேண்டும் என்ற பிரேரணையை பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசா கொண்டுவந்தார்.

### அமிர் எதிர்ப்பு

இந்தப்பிரேரணையை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் எதிர்த்தார். இந்தச் சட்டமூலங்களின் தாற்பரியங்களை அறிந்துகொள்வதற்கு அவகாசம் தேவையென்றும் அதனால் இவைமீதான விவாதத்தை ஒத்திவைக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தச் சட்டங்களில் ஒன்று பல ஆண்டுகாலமாக இருந்து வரும் சட்டத்தை மாற்றி அமைக்கின்றது. மற்றது ஒரு குறிப்பிட்ட இயக்கத்தை தடைசெய்வதுபோலிருந்தாலும் சகல ஜனநாயக உரிமைகளையும் பறிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டார் அவர்.

பிரதமமந்திரி இதற்கு பதிலளிக்கையில் இதற்குமுன் எதிர்க்கட்சியினரின் கோரிக்கைகளை ஏற்று விவாதங்கள் ஒத்திவைக்கப்பட்டிருந்தாலும் இப்பொழுது அவ்வாறு செய்ய முடியாமலிருக்கிறது என்றார்.

பிரதமமந்திரி சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் நாட்டில் 73-ம் ஆண்டுக்குப்பிறகு குற்றச்செயல்கள் அதிகரித்து வருகின்றன. கடந்த அரசாங்கம் கொண்டுவந்த ஒத்திவைக்கப்பட்ட தண்டனைச் சட்டம் காரணமாக குற்றங்கள் அதிகரித்து வந்துள்ளன என்றார்.

இந்தச் சட்டங்களின் கீழ் குற்றம் புரியாதவர்கள் தாம் நிரபராதி என்பதை நிரூபிப்பதற்கான சகலவசதிகளும் அளிக்கப்படும். ஆனால் குற்றம் புரிவோர் தப்பிச்செல்ல அனுமதிக்கப்படமாட்டாது. நாட்டைக் குற்றச்செயல்களிலிருந்து விடுவிப்பது அரசின் கடமையாகும் என்றார்.

இந்தச்சட்டத்தின் சில பகுதிகளை திருத்தி அமைப்பது பற்றி குழுநிலை விவாதத்தின் போது அரசு கவனிக்கும் என வர்த்தக அமைச்சர் அறிவித்தார்.

தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அதுபோன்ற இயக்கங்களையும் தடைசெய்வதற்கான சட்டமூலத்தையும் அதிமுக்கிய விசாரணைக் கைதிகளை காலவரையறையின்றி விளக்கமறியலில் வைப்பதற்கு வழிசெய்யும் மசோதாவையும் நேற்று நீதியமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் தேசிய அரசுப்பேரவையில் சமர்ப்பித்தார். அவர் அப்போது பேசுகையில் நாட்டில் குற்றச்செயல்கள் தொடர்ச்சியாக அதிகரித்துவருவதினால் இச்சட்டங்கள் கொண்டுவரப்படவேண்டியதாகக் கூறினார்.

பிணையில் விடுக்கப்பட்ட குற்றவாளிகள் தொடர்ந்தும் குற்றச்செயல்களில் ஈடுபட்டுவருகிறது தெரியவந்துள்ளது. என்று அமைச்சர் கூறினார்.

### சிறிமா கருத்து

இந்த மசோதாவின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பேசுகையில் நாட்டில் அதிகரித்துவரும் குற்றங்களைக் கட்டுப்படுத்தவேண்டியதன் அவசியத்தை நாம் உணர்கின்றோம்.

[6-ம் பக்கம் பார்க்க]

---

சர்க்காரியா கமிஷன் அறிக்கை

## தமிழக அரசிடம்

### மத்திய அரசு கையளித்தது

சென்னை, மே 18

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி மீதான லஞ்சஊழல் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்த சர்க்காரியா கமிஷன் அறிக்கை மத்திய அரசிடமிருந்து இன்று தமிழ்நாடு அரசுக்கு வந்துசேர்ந்தது.

இந்த அறிக்கைமீதான சட்ட நிபுணர்களின் ஆலோசனையைப் பெற்ற பின் மேல்நடவடிக்கை எடுப்பதுபற்றி தமிழ்நாடு அரசு முடிவுசெய்யும்.

இதேசமயம் இந்தக்கமிஷனை மத்திய அரசே நியமித்திருந்தமையால் திரு. கருணாநிதி மீது நடவடிக்கை எடுப்பது பற்றி மத்திய அரசுதான் முடிவு செய்யவேண்டும் என்று தமிழ்நாடு நிதியமைச்சர் திரு. நாஞ்சில் மனோகரன் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

---

## இந்திய தமிழ்ப் படத்தில் இலங்கை நடிகர் காமினி

### ஸ்ரீப்பிரியா ஜோடியாக நடிப்பார்

(வெள்ளவத்தை)

இந்தியாவில் தயாரிக்கப் படும் தமிழ் திரைப்படமான "நீலத்திரைக்கடல் ஓரத்திலே...!" என்ற திரைப் படத்தில் சிங்களத் திரையுலகின் முன்னணி நடிகர் காமினி பொன்சேகா கதாநாயகனாக நடிக்கவிருக்கிறார்.

மேற்படி திரைப்படத்தில் நடிப்பதற்காக நடிகர் காமினி பொன்சேகா அண்மையில் இந்தியாவுக்குப் பயணமானார். இந்த திரைப்படத்தில் நடிகர் காமினிக்கு ஜோடியாக நடிகை ஸ்ரீப்பிரியா நடிக்கிறார்.

நீலத்திரைக்கடல் ஓரத்திலே என்ற திரைப்படத்தை பிரபல டைரக்டர் சங்கர் டைரக்ட் செய்கிறார். இவர் அண்மையில் 'வருவான் வடிவேலன்' திரைப்பட பாடல் காட்சி ஒன்றை இலங்கையில் படமாக்கினார் என்பது ரசிகர்கள் அறிந்ததே!

இந்த திரைப்படத்தில் நடிகர் காமினியோடு நம்பியார், ரஜனிகாந்த், தேங்காய் சீனிவாசன், ஹிந்தி நடிகை ராதா சலூஜா, ஸ்ரீபிரியா, லதா ஆகியோர் நடிக்கவிருக்கின்றனர். இப்படத்திற்கான படப்பிடிப்பு பங்களூரில் ஒரு மாத காலம் நடைபெறும்.

இந்த திரைப்படத்தை 'தங்கைக்காக' திரைப்படத்தை தயாரித்த பெர்னாண்டோ தயாரிக்கிறார். இவர் முன்பு இலங்கையில் சினிமாஸ் ஸ்தாபனத்தில் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

## அதிகாலை 2மணிக்கு உரும்பராயில் நிகழ்ந்த

# பொலிஸ்-ராணுவ முற்றுகை

(யாழ்ப்பாணம்)

இராணுவமும் பொலிஸாரும் சேர்ந்து உரும்பராய்ப் பகுதியில் வீடுவீடாகப் பெரும் தேடுதல்வேட்டையை நேற்று அதிகாலை முதல் பகல்வரை நடத்தியது.

தேடுதல் வேட்டையின் பொருட்டு இராணுவமும் பொலிஸாரும் உரும்பராய்க் கிராமத்தின் சகலபகுதிகளையும் அதிகாலை 2-00 மணியளவிலேயே துப்பாக்கிகள் சகிதம் முற்றுகையிட்டனர்.

எனினும் காலை 6 மணியளவிலேயே தேடுதல்வேட்டை வீடுவீடாக ஆரம்பித்தது.

[6-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

யாழ். பல் நிலையத்திற்கு அண்மையில் வீடு அல்லது வீட்டின் ஒரு பகுதி (Annex) வாடகைக்கு இருப்பின் தொடர்பு கொள்ளவும், வி. எஸ். ஜீவரட்ணம், ராணி சினிமா, யாழ்ப்பாணம். 9320

கடந்த காலங்களில் தொண்டர்களாயிருந்த இருவர் ஆசிரியர் பதவிக்கு சென்றமையால் இல்லத்தில் தங்கியிருந்து இலவச சேவை புரிவதற்கு இரு பெண் தொண்டர்கள் தேவை. தங்குமிடம் உணவு இலவசம். சான்றிதழ்களுடன் 22-5-78 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நேரில் வரவும். நிர்வாகப் பொறுப்பாளர், சைவ அநாதை இல்லம், கைதடி. 9321

க. பொ. த. உயர்தர வகுப்பில் கணிதம், பௌதிகம் கற்பிக்க பகுதிநேர ஆசிரியர் தேவை. 26-5-78க்கு முன் அதிபர், ஞானசாரிய கல்லூரி, கரவெட்டி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க. 9331

### விற்பனைக்கு

கறுத்தக்கொழும்பான், வெள்ளைக்கொழும்பான், அம்பலவி, செம்பாட்டான், மல்கோவா மாம்பழங்கள் 10,000 வரையில் 9 மரங்களில் விற்பனைக்கு இருக்கின்றன 1500 தென்னைமரங்களின் ஓலைகளும் விற்பனைக்கு இருக்கின்றன. இவை பற்றிய விபரங்களுக்கு தேவதாசன், மே/பா திருமதி பா. ஏபிரகாம், தபாற்கந்தோர் முன்பாக, சாவகச்சேரி விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 9322

றேடியோ கடையின் அதி முக்கியமான இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் றேடியோ உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 9324 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9324

### தவறிவிட்டது

சாவகச்சேரியிலிருந்து வரும் வழியில் இரும்புப் பெட்டி திறப்புக் கோர்வையும் இரு திறப்புக் கோர்வையும் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, செல்லையா அன் சன்ஸ் நகை மாளிகையில் கொடுத்து சன்மானம் பெறவும். 9319

### WANTED

Agricultural Lecturer. Male, qualified with experience, Afternoons hourly basis J. C. Agricultural Institute, Maruthanamadam. 9325

### தேவை

#### தேநீர்ச்சாலை உதவியாளர்கள்

சிநோர் தேநீர்ச்சாலையில் கடமைபுரிவதற்கு தேநீர்ச்சாலை உதவியாளர்கள் தேவை. நாளாந்த அடிப்படையில் ஊதியம் வழங்கப்படும். விண்ணப்பங்கள் இம் மாதம் 25ம் திகதி வியாழன் அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

பொது முகாமையாளர் சிநோர் அபிவிருத்தித்திட்டம் காரைநகர். 9334


## ஆசிரியர் சங்கக் கூட்டம்

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கொழும்பு தெற்கு மாவட்டக் கிளையின் வருடாந்தக் கூட்டம் இலங்கை ஆசிரியர் சங்கக் காரியாலயத்தில் எதிர்வரும் 31ம் திகதி நடைபெறவிருக்கிறது.

ஆசிரியர் கல்வி அமைச்சுக்கும், காரியாலயங்களுக்கும் செல்வதைத் தடைசெய்தமை, கடன் சபை பணம் கழிப்பினும் கடன் வழங்காமை, நியாயமற்ற இடமாற்றம். வேலை இடைநிறுத்தம், 70 ஆசிரியரைப் பயிற்சியில் நீக்கியமை மாணவரை அடக்குதல், வெள்ளையறிக்கை, தொழிலாளர் வேலைநீக்கம், சுதந்திர வர்த்தக வலயம். ஆகிய பிரச்னைகள் பற்றிய தீர்மானங்களும், புதுவருட உத்தியோகத்தர் மற்றும் செயற்குழு உத்தியோகத்தர் தெரிவுகளும் நடைபெறும். (உ)


## கேள்வி விளம்பரம்

அராலி கிராம சபை விசேட ஆணையாளரால் இச்சபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து கீழ்க்காணும் வேலைகட்கு அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகள் 1978-05-31ந் திகதி காலை 10-00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களை இச்சபைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

வேலைகள்

1. ஆசையகுளம் வீதி வட்டாரம் 6.
2 மடத்தடி வீதி வட்டாரம் 13.

மு. சுப்பிரமணியம்,
விசேட ஆணையாளர்,
அராலி கிராமாட்சி மன்றம்,
கிராமசபை அலுவலகம்,
அராலி.
10-05-78 9318

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

## பின் உறுதிக்கட்டளை அறிவித்தல்

ஊர்காவற்றுறை, காரம்பனைச் சேர்ந்த மரணமெய்திய வேலுப்பிள்ளை நாரா, யணபிள்ளை கந்தையாவின் மரண சாதனமெழுதப்படாத சொத்துவிடயமாக

கந்தையா சிறிகாந்தா, காரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறை.

-மனுதார்

இல: த. 3343

மேலே உள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அத்தினைக்குப் பின் உறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1978ஆம் ஆண்டுவைகாசி மாதம் 26ஆந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின் உறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஒப்பம்
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

தேதி 15-5-78

வரைவு
இ. சிவசுப்பிரமணியம்
மனுதாரரின் பதிவுபெற்ற சட்டத்தரணி.

9317

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# "தலைவர்களில் நம்பிக்கை வைத்து பொறுமையுடன் இருக்கவேண்டும்"

## தமிழ் இளைஞருக்கு கோரிக்கை

[பண்டத்தரிப்பு]

"இந்தியாவிலிருந்து ஜெட் அதிவேக விமானம் ஒன்று பாரிஸ் நகருக்குப் புறப்பட்டு போய்க்கொண்டிருக்கிறது. அதில் உள்ள விமானி விமானத்தை தட்ப, வெட்ப, சுவாத்திய நிலைகளையும் காற்றின் அழுக்கத்தையும், பனிமுகாரையும் மழை வீழ்ச்சியையும், வானளாவிய மலைகளையும் நுணுக்கமாக ஆராய்ந்து அவதானித்துக்கொண்டு அதற்குத்தக்கதாக விமானத்தைச் செலுத்துவார். எதிர்பாராதவிதமாக புயல், இடி, மின்னல் மழை, பனிப்புகார் இப்படித் தென்பட்டால் விமான மோட்டி இடையிடையே சற்றுத் திருப்பிப்போவதும் வேகத்தைக் கொஞ்சம் குறைத்துப்போவதும் வழக்கம். எப்படித்தான்போனாலும் எந்தநாட்டிற்குப் போக முற்பட்டாரோ அந்த நாட்டிற்குப் போவதும் உறுதி. அதேபோல தமிழ் ஈழ மக்களை தாங்கிச் செல்லும் விமானத்தைத் தளபதி அமிர்தலிங்கம் தன் சகாக்கள் பலருடன் ஓட்டிச்செல்கின்றார். என்றுமே கண்டிராதபடி வானளாவிய யூ. என். பி. யின் பலத்தை எதிர்நோக்குவதோடு இனக்கலவரம் என்ற கொடிய மின்னல், மழை, சூறாவளி எல்லாம் எம்மை பலத்த சோதனைக்கு உட்படுத்திவிட்டது. இன்னமும் இருள் சூழ்ந்த வானில் ஒளிக்கதிர்கள் தெரியவில்லை. இந்த நிலையில் சற்றே நிதானமாக ஆனால் திடசங்கற்பத்தோடு நாம் நமது பயணத்தை மேற்கொள்ளவேண்டும். என்ன தான் இடர் ஏற்படினும் நாம் சென்றடையும் இலட்சியம் இம்மியளவும் மாற்றமில்லை என்பதை "அமிர்" விளக்கிவிட்டார்".

இவ்வாறு ஏழாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 10 வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் சட்டத்தரணி திரு மு. திருநாவுக்கரசு கூறினார். திரு. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

"விமானத்தில் போகும் மக்களை எப்படியும் கட்டிக்காத்து குறித்த இடத்தில் விமானி கொண்டுபோய்ச் சேர்ப்பதுபோல நமது தமிழ் இனத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற விமானத்தில் ஏற்றிச் செல்லும் எமது தமிழ்த் தலைவர்கள் தக்கபடி குறித்த இடத்திற்கு எப்படியும் தமிழ் ஈழத்து மண்ணில் கொண்டு போய்ச் சேர்ப்பார்கள். எமது நம்பிக்கை வீண் போகாது.

"நிலைமைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு மிகவும் சாதுரியமாக எமது தலைவர்கள் என்பதில் நம்பிக்கை வைத்துக் கொண்டு நிலைமையை நன்கு அவதானித்துபொறுமையுடன் எம் இளைஞர்கள் இருக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு தாமோதரம்பிள்ளை உட்படப் பலர் இவ்விழாவில் பேசினார்கள்.

......


## ஈட்டு வழக்கில் விற்பனவுக்கான அதிகார விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல. ஈடு/14427

சங்கானை மேற்கு கனகசபை உருத்திரசிங்கம்

—வாதி

எதிராக

1. வல்லிபுரம் செல்லத்தம்பியும் பெண்
2. வள்ளியம்மை இருவரும்

சில்லாலை ரோட், பண்டத்தரிப்பு.

—பிரதிவாதிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்த்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக்கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1978ம் ஆண்டு ஆனி மாதம் 8ந் திகதி (8-6-78) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் குறித்த ஆதனத்தில் நின்று என்னால் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த வாதிக்கு ரூபா 2750/-வும் மேலும் ரூபா 2000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு பத்து (10) வட்டி வீதம் வழமுக்கு அணைத்த திகதியாகிய 1974ம் ஆண்டு ஆனி மாதம் 21ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1977ம் ஆண்டு ஆனிமாதம் 17ம் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 563-30 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 398-00 நடைபெறவேண்டிய செலவு ரூபா 90-30 மேலதிக சமயாசமயச்செலவு 76-00 கொடுபடவேண்டியிருப்பதாலும்)

### ஆதன இடாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் மேற்கு பண்டத்தரிப்பு கோவிற்பற்று சில்லாலை இறை "தேவநாலை" பரப்பு நெல் இலா. 10 (பத்தும்) கிணறும் எல்லை கிழக்கும் தெற்கும் கதிரேசு பொன்னுவுக்கும் பெண் நாகமுத்துவுக்கும் முரியவாதனம் வடக்கு தெய்வேந்திரம்பிள்ளை குரைப்பிள்ளையின் ஆதனம் மேற்கு சுவக்காலை இதில் குறித்த கிணற்றில் கிழக்கெல்லைக் காணிக்குரிய அரைவாசிப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் புறநீங்கலாக இருப்பதாலும்.

2. மேற்படி சங்கானைக் கோவிற்பற்று சங்கானை மேற்கு இறை "கரம்பகோணி" பரப்பு நில இலா. 4 (நாலும்) தென்னைகளும் எல்லை கிழக்கும் வடக்கும் கதிரேசு பொன்னுவுக்கும் பெண் நாகமுத்துவுக்கும் உரிய ஆதனம் மேற்கு சத்தியோகுமையார் கோயில் ஆதனம் தெற்கு ரோட்டு இதடங்கலும் கிழக்கெல்லைக் காணிக்குள் இருக்கிற கிணற்றில் [illegible] அரைவாசிக்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

கா. முத்துக்குமாரு ஐயர்
ஆணையாளரும்
விலைமதிப்பாளரும்.

தங்கவேல் ஆலயம்,
சந்நிதிவேல்,
பருத்தித்துறை.
18-4-78 9328

## யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் [வரையறுக்கப்பட்டது]

# கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் பின் குறித்த பொருட்களுக்கு கேள்வி மூலம் விற்பனைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) கழிவு ஈயம் (2) வெற்றுப்பெட்டி (3) கழிவுக்கடதாசி

விண்ணப்ப முடிவுத் திகதி: 22-05-78

மேலதிக விபரங்களுக்கு சங்கக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்

74/3, ஆஸ்பத்திரி துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்,
18-05-78. 9329


## தபால் பையை திருடினாராம்

[பண்டத்தரிப்பு]

தபால்சேவகர் ஒருவரின் தபால் பையை திருடிச்சென்றதாக குற்றம்சாட்டப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த வாலிபரை மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி 1000 ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

பண்டத்தரிப்பு தபால் நிலையத்தில் தபால் சேவகராக கடமையாற்றும் பொன்னுத்துரை என்பவர், சைக்கிளில் தபால் பை ஒன்றை வைத்து விட்டு ஒரு வீட்டில் தபால் விநியோகம் செய்துகொண்டிருக்கையில் சந்தேக நபரான பனிப்புலத்தைச் சேர்ந்த தேவராசா என்னும் வாலிபர் தபால் பையை திருடிக்கொண்டு ஓடிவிட்டாராம். இதுபற்றி சங்கானை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து சங்கானை பொலிசார் மேற்படி வாலிபரை கைதுசெய்து மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்செய்த போது, அவரை கடந்த 10ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இவரை மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது நீதிபதி ஆயிரம் ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டு மறுவிசாரணையை ஜூன் மாதம் 28ம் திகதிக்கு ஒத்திவைத்தார். சந்தேக நபரின் சார்பில் சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு ஆஜரானார்.

## அளவெட்டிப் பகுதியில் பகுதிநேர மருந்துச்சாலை

[பண்டத்தரிப்பு]

போக்குவரத்து வசதிகள் மிகவும் குறைவாக இருக்கும் அளவெட்டி வடக்குப் பகுதியில், பகுதிநேர மருந்துச்சாலையை நிறுவித்தருமாறு அப்பகுதி மக்கள், யாழ். மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகரை கோரியுள்ளனர்.

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். தெய்வேந்திரமும் இது பற்றி பரிசீலனை செய்து, விரைவில் இந்தப் பகுதிநேர மருந்துச்சாலையை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளை செய்து வருகின்றார். அளவெட்டி அரசினர் வைத்தியசாலை டாக்டரே இந்த பகுதிநேர வைத்திய சாலையிலும் வாரத்தில் இரு தினங்கள் கடமையாற்ற ஒழுங்குகள் செய்யப்படவிருக்கின்றது.

ஈழநாடு
The Eelanaadu

## வெள்ள அழிவு

தென்னிலங்கையில் கடந்தசில தினங்களாகப் பெய்த கடும்மழை காரணமாக அங்கு பெருவெள்ளம் ஏற்பட்டு பேரழிவை ஏற்படுத்தியிருக்கிறது.

1947ம் ஆண்டில் ஏற்பட்ட பெருவெள்ளத்துடன் இம்முறை ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு ஒப்பிடப்படுகிறது.

பலபகுதிகளில் இப்போது மழை ஓய்ந்துவிட்டாலும் தென்மேற்குப் பகுதியிலும் மலையகப் பகுதியிலும் இன்னமும் மழைபெய்துகொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

மழையினாலும் வெள்ளத்தினாலும் வீடுவாசல்களை இழந்து பொது இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளவர்களின் தொகை இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவியளிப்பதற்கு உடனடியாக ஒரு கோடி ரூபாய் தேவை என்று சமூக சேவை இலாகா டைரக்டர் தெரிவித்திருக்கிறார்.

வீடுகள் பல அழிந்துவிட்டன; வீதிகள் பல வெள்ளத்தில் அள்ளுண்டுவிட்டன வயல்களில் வெள்ளம் தங்கி பயிர்கள் அழுகிவிட்டன.

வெள்ளத்திலும் மண்சரிவிலும் சிக்கி இதுவரை பத்துப்பேர் உயிரிழந்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி வழங்கப்பட்டுவருகிறது. அரசாங்கமும் பொது ஸ்தாபனங்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்க முன்வந்துள்ளன.

மழை தொடர்ந்து பெய்வதும் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதும் மண்சரிவுகள் நிகழ்வதும் பலர் வீடுவாசல்களை இழந்து நிர்க்கதியாக நிற்பதும் அவர்களுக்குநிவாரண உதவிகள் வழங்குவதும் நமது நாட்டில் ஆண்டுதோறும் நிகழும் சம்பவங்கள்.

மகாவலிகங்கைத் திட்டம் மற்றும்சில ஆறுகளைத் திசை திருப்பும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த ஆறுகள் சரியான முறையில் திட்டமிடப்பட்டு வரண்ட பிரதேசங்களுக்குத் திருப்பப்பட்டு அந்தப் பகுதிகளில் புதிய குளங்களைக் கட்டுவித்தும் தூர்ந்துபோன பழைய குளங்களை ஆழமாக்கியும் நீரைத்தேக்கி வைத்தால் ஆண்டுதோறும் ஏற்படும் வெள்ளத்தினால் இப்படியான அழிவுகளும் பாதிப்புகளும் ஏற்படமாட்டா.

இந்த நவீன விஞ்ஞான யுகத்தில் பெரும் பெரும் நதிகளையும் ஆறுகளையும் ஆற்றுப்படுத்தி அவற்றின் நீரை விவசாயத்துக்கும்மின்சார உற்பத்திக்கும் பயன்படுத்துவது நடக்கமுடியாத அதிசயமல்ல.

பலநாடுகளில் பெரிய நதிகளையும் ஆறுகளையும் சரியான முறையில் வழிப்படுத்தி மக்கள் பயன்பெற்றிருக்கின்றனர்.

ஆண்டுதோறும் வெள்ளத்தைஎதிர்பார்த்திராமல் வெள்ளம் ஏற்படாமல் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள முன்வருவது விவேகம்.

---

### காங்கேசன்துறை வீடுகளில்

# தேடுதல் நடத்திய பொலிசார்

## புகைப்படங்களிலும் நோட்டம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைப்பகுதியில் நேற்று காலை பொலிசார் வீடு வீடாகச்சென்று தேடுதல் நடத்தினர்.

ஒவ்வொரு வீட்டினுள்ளும் ஆயுதபாணிகளாக நுழைந்த அவர்கள் வீட்டில் உள்ள சூட்கேஸ்கள், அலுமாரிகள் முதலானவற்றையும் வீட்டார் முன்னிலையில் திறந்துசோதனையிட்டனர்.

சுவர்களில் மாட்டப்பட்டிருந்த புகைப்படங்களையும் அவர்கள் உற்றுமிக உன்னிப்பாக நோட்டமிட்டனர்.

வன்செயல்களில் ஈடுபட்ட வாலிபர்கள் எவராவது அப்படங்களில் காணப்படுகின்றனரா, அப்படியாயின் அவ் வீட்டுக்காரர்களுக்கும் அவர்களுக்கும் இடையிலான தொடர்பு என்ன? என்பதை அறியும் பொருட்டே பொலிசாரின் பார்வை சுவரில் மாட்டப்பட்டிருந்த படங்களிலும் தாவியது எனத்தெரிகிறது.

தமிழ்ப்பொலிசாரும் கணிசமான அளவில் சோதனையில் ஈடுபட்ட கோஷ்டியில் இடம் பெற்றிருந்ததால் சோதனைக்குள்ளாக்கப்பட்ட வீட்டுக்காரர்களுக்கு அசௌகரியம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

---

### நல்லையில் இன்று

[யாழ்ப்பாணம்]

இன்று 19ம் திகதி நல்லைக் கந்தன் ஆலயத்தில் கைலைநாதர் பார்பதிஅம்மை பரிணயம் நடைபெறுகின்றது. கந்தவேள் கதை விரிவுரையில் ஸ்ரீசண்முகப் பெருமான் திருஅவதாரம் நடைபெறுவதுடன் இறைவன் இறைவி ஒன்றிணைப்புவிழா நடைபெறும். பார்பதி இமயமலையிலும் சிவன் திருக்கைலைப் பெருங் கோவிலிலும் தனித்தனி தபசு புரிந்த சரித்திரத்தை மேற்படி விழா விளக்குவதாகும். [அ]

---

# "நாம் குடிசை வாசிகள் வாய்ப்பைப் பயன் படுத்துவோம்"

## குண்டன் ஒருவன் சொன்னதாக சன்சோனிக் கமிஷன்முன் சாட்சியம்

(கண்டி)

'நாங்கள் குடிசையில் வாழும் ஏழைகள். இப்படியான சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எங்கள் வீட்டில் கொள்ளையடிக்கையில் குண்டர்களில் ஒருவன் சொன்னான்'.

இவ்வாறு கண்டியில் நடைபெற்ற சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் வண. பிதா மனுவேல் ஜோர்ஜ் நல்லதம்பி கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது கண்டியில் இருந்து மூன்று மைலுக்கு அப்பால் உள்ள படியந்த என்ற இடத்தில் வசிக்கிறேன்.

கலவரவேளை கொள்ளையடித்தவர்களில் சிறுவர்களும், பெண்களும், வயோதிபர்களும் கூட இருந்தனர். சிலர் வீட்டில் இருந்த தளபாடங்களைக் கூட எடுத்துச்சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் நாகவிகாரை இரண்டாவது தடவையாக தீக்கிரையாக்கப்பட்டுவிட்டதாக வதந்திபரப்பப்பட்டது. என் மனைவி சிங்களவர். மனைவியிடம் சிங்களவரா? தமிழரா? என்று கொள்ளையரில் ஒருவரான டக்ளஸ் என்பவன் கேட்டான் இவர் சிங்களப்பெண் ஆனால் கணவர் தமிழர் என்று ஜெயவர்த்தன என்ற நபர் அந்நேரம் சொன்னார்.

அப்போது 50 பேர் கேட்டுக்கு மேலால் ஏறிப்பாய்ந்தனர். டக்ளஸும், மஞ்சள் தொப்பியணிந்த ஒருவரும் வீட்டை உடைக்க முயன்றனர்.

இது கடன்வாங்கிக் கட்டிய வீடு, உடைக்கவேண்டாம் உங்களுக்கு என்ன வேண்டும்? என்று என் மனைவி கெஞ்சினார். பணம்வேண்டும் என்றார்கள் தன்னிடம் அந்நேரம் 5 ரூபா இருப்பதாக மனைவி சொன்னார். மனைவியின் கழுத்தில் இருந்த நகைகளைக் கழற்றித் தருமாறு டக்ளஸ் கேட்டான். மனைவி மறுத்தார்.

காதணியைக் கேட்டபோது மனைவி கொடுத்தார். இவ்வளவு பேருக்குப் பங்குபோட இது போதாது வீட்டையுடையுங்கள் என்று மஞ்சள் தொப்பிக்காரன் கத்தினான். நாங்கள் குடிசையில் வாழ் ஏழைகள் இந்த சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் சொன்னார்.

இதன்பின் மகளின் காதணியையும் கேட்டனர். கூட்டத்தில் இருந்த ஒரு பெண்மணி சிங்களப்பெண் என்று கூறியதால் மகளின் காதணி திருப்பிக்கொடுக்கப்பட்டது' என்றார்.

தன்மானமுள்ள எவரும் 2ம் தர குடிகளாக மாறவிரும்பவில்லை. எனவே தனிநாடு கேட்டது தவறில்லை என்றும் சொன்னார். [உ]

---

# "அதிகாரிகளுக்குப் பணிய பொலிசார் மறுத்தனர்"

## சன்சோனிக்கமிஷன் முன் வர்த்தகர் சாட்சியம்

(கண்டி)

"கலவரவேளை கண்டி பொலிஸ் நிலையத்திலும் மற்றைய நிலையங்களிலும் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கச் செல்லுமாறு சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் விடுத்த உத்தரவுக்கும் கீழ்ப்படிய பொலிசார் மறுத்ததைநேரடியாகவே நான் கண்டுள்ளேன்'

இவ்வாறு கண்டியில் சன்சோனி கமிஷன்முன் வர்த்தகரான மாணிக்கராசா என்பவர் சாட்சியமளிக்கையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது;

"ஒரு சந்தர்ப்பத்தில் கண்டி நகரத்தில் ஆகஸ்ட் 19ந் திகதி கொள்ளையடிக்கப்பட்ட எமது கடைஒன்று பற்றிய விசாரணை எவ்வாறுள்ளதென அறிய பொலிஸ்நிலையம் சென்று கான்ஸ்டபிள் ஒருவரிடம்விசாரித்தேன். எனது 28 வருடகால வாழ்க்கையிலேயே கேட்டிராத மிக மோசமான ஆபாச வார்த்தைகளால் அவர் என்னைத் திட்டினார்.

'அந்தப்பொலிஸ்காரர்கூறிய வார்த்தைகள் மிக அசிங்கமானவை. ஆதலால் இம் மண்டபத்தில் இவ்வளவு பேருக்கு முன்னால் அவற்றைத் திருப்பிக் கூற வெட்கப்படுகிறேன். சம்பந்தப்பட்ட கான்ஸ்டபிளின் இலக்கத்தையும் சாட்சி தெரிவித்தார். [உ]

---

### கண்ணகை அம்மன் பொங்கல் உற்சவம்

(பருத்தித்துறை)

தென்புலோலியூர் மந்திகை கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம் இம்மாதம் 23ம் திகதி 10 மணிக்கு நடைபெறும். இவ் உற்சவத்தைத் தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை முதல் சிலம்புக்கதை இக்கோவிலில் படிக்கப்பட்டுவருகிறது.

---

### 23-ந் திகதி நினைவாஞ்சலி

(பருத்தித்துறை)

வெளிநொச்சித்தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளை தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம், சட்டமேதை ஜி. ஜி. பொன்னம்பலம் ஆகியோரது முதலாவது சிரார்த்ததினத்தையொட்டி அன்னதானத்துடன் நினைவஞ்சலிக்கூட்டம் நடத்த இம்மாதம் 23ந் திகதி ஒழுங்கு செய்துள்ளது:

அன்றையதினம் வெளிநொச்சி கந்தசாமி கோவிலில் அன்னதானமும் அதைத்தொடர்ந்து ரோட்றிகோ மைதானத்தில் நினைவஞ்சலிக்கூட்டமும் நடைபெறும். இந்நினைவஞ்சலிக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றுவர்.

---

### மணிவாக்கு

உறக்கம் ஒரு திருடன், அது ஒருவனுடைய வாழ்வில் பாதியைக் களவாடிவிடுகின்றது.

—கேரண்ராட்

---

நல்லூர் அரசடி

# ச.ச. நிலையஆண்டு விழாவும் நாடகவிழாவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் அரசடி ஜனசக்தி சனசமூகநிலையத்தின் 30 வது ஆண்டுநிறைவு விழா இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவிருக்கிறது.

இன்று நிலையத்தலைவர் திரு. பொ. முத்துலிங்கம் தலைமையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். அதிகாலை 25 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி நடைபெறும். தொடர்ந்து மாலைவரை விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்:

நாளை திரு: ச; இராசையா தலைமையில் அதிகாலை மரதன் ஓட்டம் முதலான போட்டிகள் ஆரம்பித்துத் தொடர்ந்து மாலைவரை நடைபெறும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை இரவு பரிசளிப்பு விழாவும் நாடகவிழாவும் நிகழும். நிலையத் தலைவர் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் யாழ். சுகாதார அதிபட்சகர் டாக்டர் பி. வி. அமரசிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்: நிலையச் சிறுமிகளின் கதம்ப நிகழ்ச்சிகள் இடம்பெறும். திரு. வி. சின்னராசா பரிசுகளை வழங்குவார். செயலாளர் திரு: வி. குமாரசாமி நன்றிதெரிவித்துப் பேசுவார்.

தொடர்ந்து ஐந்து நாடகங்கள் மேடை ஏறும். (அ)

# ஸயரில் கடும் சமர்; விமானநிலையம் மீட்பு

## அரசுப்படை முன்னேறுகிறது

கின்ஷாஸா, மே.18 ஸயரின் தேசிய விடுதலைமுன்னணி பிரிவினைவாதிகளுடன் போரிட்டு வரும் அரசுப்படைகள் ஷபா மாகாணத்திலுள்ள கொல்வெஸி விமான நிலையத்தை கொரில்லாக்களிடமிருந்து மீண்டும் கைப்பற்றியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

பிரான்ஸில் விசேடபயிற்சி பெற்ற பரசூட் துருப்புகளே விமான நிலையத்தை மீட்டுள்ளன.

இதே வேளையில் விமான நிலையத்தை அண்மித்த பகுதிகளில் அரசுப்படைகளுக்கும் கொரில்லாப்படையினருக்குமிடையே கடும் சமர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்றும் அறிவிக்கப்பட்டது.

### அமெரிக்கா உதவத்தயார்

இது இவ்வாறிருக்க ஸயர் அரசுப்படைகளுக்கு ஆயுத பெற்றோலியப் பொருட்களை உதவ அமெரிக்க அரசு தயாராக உள்ளதாக அறிவித்துள்ளது.

### ரஷ்யா-அமெரிக்கா பரஸ்பரம் குற்றச்சாட்டு

அமெரிக்கா இவ்வாறு தெரிவித்ததை அடுத்து, ஸயர் உள்நாட்டு விவகாரத்தில் அமெரிக்கா தலையிடுகிறது என்று ரஷ்யாவும், ரஷ்யா தலையிடுகிறது என்று அமெரிக்காவும் குற்றம்சாட்டியுள்ளன.

### உஷார் நிலையில் அமெரிக்கப்படைகள்

இதே சமயம் அமெரிக்கா 85 வது இராணுவப்படை விமான நிலையமொன்று தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்று வாஷிங்டன் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

# சஞ்சய்க்கு நீதிமன்றக் கட்டளை

புதுடில்லி, மே 17 திருமதி இந்திராகாந்தியின் புதல்வர் சஞ்சய் காந்திக்கு புதுடில்லி மெட்ரொபொலிட்டன் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கட்டளை பிறப்பித்துள்ளார்.

புதுடில்லியில் கடந்த மாதம் ஷாகமிஷன் விசாரணை மண்டபத்திற்குமுன் நடைபெற்ற வன்முறைச்சம்பவங்கள் குறித்தே இக்கட்டளை அனுப்பப்பட்டுள்ளது.

சஞ்சய்காந்தி தற்போது றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. (இ)

# இந்தியராஜ்ய சபையில் 2 தினங்கள் கூச்சல்குழப்பம்

## 3 மணிநேரம் சபை ஒத்திவைப்பு

புதுடில்லி, மே. 18 இந்திய வானொலியில் ஒலிபரப்பப்பட்ட செய்தி ஒன்று தொடர்பாக நேற்று இந்திய ராஜ்ய சபையில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இந்திரா காங்கிரஸ் கட்சியினர் கூச்சல் எழுப்பி குழப்பம் செய்ய முயன்றதை அடுத்து 3 மணி நேரம் சபை நிகழ்ச்சிகள் தடைப்பட்டன என அறிவிக்கப்பட்டது.

மத்திய அரசுக்குச் சொந்தமான ஜீப் ஒன்றினால் மத்திய புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவரின் மகன் மோதுண்டு இறந்தது தொடர்பாக ஆகாஷ்வாணி தவறான முறையில் செய்தி ஒலிபரப்பியது என்று இந்திரா காங்கிரஸ் கட்சிகள் குற்றம் சாட்டியிருந்தன.

இக்குற்றச் சாட்டை தகவல் ஒலிபரப்பு அமைச்சர் மறுத்து ஆகாஷ்வாணி சரியான முறையிலேயே செயல்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

இதையடுத்தே சபையில் கூச்சலும் குழப்பமும் ஆரம்பமாகியது. அடுத்து சபை 3 மணி நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

### முன்னரும் கூச்சல் குழப்பம்

இதே சமயம் நேற்று முன்தினம் ராஜ்யசபையில் நெருக்கடி நிலை குறித்து விசாரணை செய்த ஷா கமிஷனின் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது இந்திரா காங்கிரஸ் கட்சியினர் அதற்கு எதிராக கூச்சல் செய்தனர். (இ)

# பூட்டோ அப்பீல் சனியன்று விசாரணை

இஸ்லாமபாத், மே 18 பாகிஸ்தான் முன்னாள் பிரதம மந்திரி ஜனாப் சுல்பிகார் அலிபூட்டோ, தம்மீது விதிக்கப்பட்ட மரண தண்டனையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த அப்பீல் மனு மீதான விசாரணை இம்மாதம் 20ம் திகதி சனிக்கிழமை லாகூர் உயர்நீதி மன்றத்தில் ஆரம்பமாகின்றது.

அப்பீல் விசாரணையின் போது ஜனாப் பூட்டோ உயர் நீதிமன்றத்தில் ஆஜராகத் தேவையில்லையென்று நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதை அடுத்து ஜனாப் பூட்டோ லாகூரிலிருந்து ராவல்பிண்டிச் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார். (இ)

# பலாலி ஆசிரியர் கலாசாலையில் உயிர்த்தரசர் ஆலயம்

[யாழ்ப்பாணம்] பலாலி ஆசிரியர் கலாசாலையில் கலாசாலையில் பயிற்சி மேற்கொள்ளும் கத்தோலிக்க ஆசிரிய மாணவர்களினால் புதிதாக அமைக்கப்பட்ட உயிர்த்தரசர் ஆலயம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை யாழ். ஆயர் வண. பி தியோகுப்பிள்ளை ஆண்டகையினால் திறந்து வைக்கப்பட்டது.

திறப்பு விழாவின் பின் கலாசாலை சினிமா மண்டபத்தில் தலைவர் திரு. ஏ. இ. எஸ். இம்மானுவேல் தலைமையில் நிகழ்ந்த கூட்டத்தில் கலாசாலை அதிபர் திரு. கந்தசாமி பேசுகையில், இக்கலாசாலையில் கத்தோலிக்க மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும் அவர்கள் இத்தகைய பெரும் பணியைச் செய்துமுடித்திருப்பது பாராட்டிற்குரியது என்றார். எமது கல்லூரியில் உள்ள மாணவர் மன்றம் இதர மன்றங்களிலும் விளையாட்டுத் துறையிலும் முதலிடம் வகிப்பவர்களெனவும் இது இவ்வாண்டில் மட்டுமல்ல 1968-ம் ஆண்டு முதலே நிகழ்ந்துவருகிறது. எனவும் ஆயர் கூறினார்.

வண. பி. தியோகுப்பிள்ளை ஆண்டகை பேசுகையில், இக்கலாசாலைக்கு ஓர் ஆலயம் வேண்டும் என்பதை நான் சில ஆண்டுகட்கு முன்பே உணர்ந்தேன். ஆனால் அதை இங்கு கல்வி பயிலவரும் கத்தோலிக்க மாணவர்களும் உணரவேண்டும் என்பதற்காகப் பொறுத்திருந்தேன். தற்போது பயிற்சியில் உள்ளவர்கள் அதை உணர்ந்தார்கள். என்னிடம் உதவி நாடி வந்தபோது நீங்கள் உங்கள் முயற்சியினால் எவ்வளவு பணம்சேர்க்கிறீர்களோ அவ்வளவு பணம் நான் தருவேன் எனக்கூறி அதை நிறைவேற்றிவைத்தேன் எனக்கூறினார்.

மன்றச் செயலாளர் திரு. அ. ம. ஜெயரத்தினம் நன்றி உரை கூறினார்.

இவ்வாலயம் கட்டிடப் பணியை கலாசாலை மறைக்கல்விப் பொறுப்பாளரான ஏ எல் எக்ஸ். ஜெயசேகரம் அடிகள் ஏற்றிருந்தார். அவரது முயற்சியினாலேயே ஆலயம் மிகக்குறுகிய காலத்திற்கட்டி முடிக்கப்பட்டது. (இ)

# "அரசியல் கைதிகளை விடுதலை செய்க"

லண்டன், மே. 18 தாய்லாந்தில் உள்ள சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச்சபை தாய்லாந்து அரசைக் கோரியுள்ளது.

விசாரக்குள்ளாகியுள்ள அரசியல் கைதிகளை பிணையிலும் மற்றைய அரசியல் நிபந்தனையின்றியும் விடுதலை செய்யுமாறு இச்சபை கோரிக்கை விடுத்துள்ளது. (இ)

# பாலபழநூர் அ.இ.அ.தி.மு.க. குழுத்தலைவர்

புதுடில்லி, மே, 18 அனைத்திந்திய அண்ணா தி. மு. க. லோகசபைத் குழு தலைவராக திரு. பாலபழநூர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

கழகத்தின் பொதுச் செயலாளர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் இத்தகவலை இன்று லோகசபை சபாநாயகரிடம் தெரிவித்தார்.

திரு. மோகனரங்கம் துணைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

# இயக்குநர்சபை

[பருத்தித்துறை] புலோலி பனநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினர்களாக பின் வருவோர் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினத்தின் சிபார்சின் பேரில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆ கந்தையா, வி. சோமசுந்தரம், டி. மயில்வாகனம், மு. இராமகிருஷ்ணன், பி. செல்வரத்தினம், வி. இரத்தினசிங்கம், கே. செல்லையா, கே. சிவபாதசுந்தரம்.

# மனைவிக்குசமமான உரிமைகோரும் கணவர்கள்

பொன், மே 18 ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் மனைவிமார் வேலைக்குச் செல்வதால், வீட்டிலிருந்து வீட்டுவேலைகளைக் கவனிக்கும் கணவன்மார்கள் மனைவிமார்களுக்காக அண்மையில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களுக்குச் சமமாக தமக்கும் உரிமை வழங்கவேண்டுமென போராட்டம் நடாத்தி வருகின்றனர்.

அண்மைக்காலமாக இப்போராட்டம் வளர்ந்துவருவதாக இதுகுறித்து ஆராய்ந்து வரும் திரு: ஹரல்ட் உற்றச் என்ற ஆராய்ச்சியாளர் கணக்கிட்டுள்ளார். ஒவ்வொரு கிராமத்திலும் சுமார் 500 பேர்வரை இக்கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றனர்.

மனைவிமார் கடமைக்குச் செல்வதால் தாமே வீட்டிலிருந்து துணிகளைச் சுத்தம்செய்வது, பிள்ளைகளைப் பராமரிப்பது, உணவுப்பண்டங்களை வாங்குவது, வீட்டிலுள்ள பிராணிகளைக் கவனிப்பது, சமையல் செய்வது போன்ற மனைவிமார் செய்யும் கடமைகள் அனைத்தையும் செய்துவருவதால் மனைவிமார்களுக்கு வழங்கும் சட்ட உரிமைகளுக்கு எந்தவிதத்திலும் குறையாத உரிமைகளைத் தமக்கும் வழங்குமாறு இவர்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-இ)

பருத்தித்துறைத்தொகுதியில்

# ஆசிரியர் இல்லாததால் பாடசாலைக்கு மூடுவிழா!

(பருத்தித்துறை) பருத்தித்துறைத் தொகுதியில் உள்ள போக்கறுப்பு கனிஷ்ட வித்தியாலயம் கடந்த இரண்டரை மாதங்களாக ஆசிரியர் இல்லமையால் மூடப்பட்ட நிலையில் உள்ளது.

போக்குவரத்து வசதிகள் குறைவான பின்தங்கிய பகுதியில் உள்ள இப் பாடசாலை மூடப்பட்டுள்ளமையால் இப்பகுதிச் சிறார்களின் கல்வி தடைப்பட்டுள்ளது. இவ் விஷயம், பெற்றோரினால் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.

இத் தொகுதியில் உள்ள இன்னுமொரு பாடசாலையான மாமுனை கனிஷ்ட வித்தியாலயம் ஒரு மாத காலமாக ஆசிரியரின்மையால் மூடப்பட்டிருந்து தற்போது ஒரு ஆசிரியர் அனுப்பப்பட்டுள்ளதால் இயங்கி வருகின்றது.

# கொல்லங்கலட்டி வயலின் கச்சேரி

[யாழ்ப்பாணம்] மாவை கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோவில் 7ம் திருவிழாவில் இன்று சங்கீத வித்துவான் செல்வி தர்மசாந்தினி கனகரத்தினம் வயலின் கச்சேரி ஒன்றை நிகழ்த்துகிறார்.

வடமாநில கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறும். இக் கச்சேரிக்கு திரு. ஏ. எஸ். இராமநாதன் மிருதங்கமும் செல்வன் இராமநாதன் ராஜு கடமும் வாசிப்பார்கள். (இ)

# மரணமானார்

[பருத்தித்துறை] மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற வாலிபருக்கு வயிற்றுவலி ஏற்பட்டு மரணமான சம்பவம் பருத்தித்துறைப் பொலிஸ்பகுதியைச் சேர்ந்த வராத்துப்பளை என்னுமிடத்தில் நிகழ்ந்தது. செல்லையா ஸ்ரீராஜா (22 வயது) என்பவரே மரணமானவராகும்.

இவரது மரணம் குறித்து மரணவிசாரணை அதிகாரி திரு எம். வி. புவனேந்திரன் ஜே. பி விசாரணை நடத்தினார். விசாரணையின்போது இறந்தவரின் தந்தை என். செல்லையா சாட்சியமளிக்கையில் சம்பவ தினத்திற்கு முதல்நாள் நாகர் கோவில் பகுதிக்கு மீன்பிடிக்கச் சென்ற எனது மகன் வயிற்றுவலியினால் அவஸ்தைப்பட்டதை அடுத்து மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார் என்றார்.

மந்திகை அரசினர் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். ஜி. லூதர் பிரேத பரிசோதனை செய்து சாட்சியமளித்தபின் இயற்கை மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# சமயச் சொற்பொழிவு

[யாழ்ப்பாணம்] சங்கானை வெல்லிக் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்றுவரும் சமயச் சொற்பொழிவுத் தொடரில் இன்று திரு. மு. சிவானந்தம் 'ஞானமும் விஞ்ஞானமும்' என்னும் பொருள்பற்றி பேசுவார்.

நாளை சனிக்கிழமை பண்டிதர் ம. இராசகுரு 'முருகன் பெருமை' பற்றியும், அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை இ. ஜெயராஜ் 'குறிஞ்சிக் குமரன்' பற்றியும் பேசுவர். (அ)

# கோரிக்கை நிறைவேறியது

(வவனியா) நொச்சிமோட்டை மக்களின் நீண்டகால வேண்டுகோளுக்கிணங்க வவனியா தெற்கு தமிழ் பிரிவு பனநோக்கு கூட்டுறவு சங்கத்தின் இரும்புக்கடை முகாமையாளராகக் கடமையாற்றிய திரு. வி. எஸ். செல்வராஜா, நொச்சிமோட்டைக் கிளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-45
ஜெய்சங்கர்-பத்மினி
நடித்த
பெண் தெய்வம்

Rio (Jaffna) Now Showing
Seven Samurai
From 20-5-78
LABYRINTH of LOVE
(Adults Only)

## நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் சட்டக்கல்லூரித் தமிழ்மன்றத்தின் நீதிமுரசு 77 சஞ்சிகை வெளியீட்டுவிழா யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

இவ்வெளியீட்டு விழாவுக்கு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமை தாங்குவார்.

Regal (Jaffna)
Daily at 4-45, 7-00 and 9-30 p.m. only
Mexican Slay Rides
Western Action Picture
(Cinemascope color)

வெற்றிகரமான 3-வது மாதம்
மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.—வாணிஸ்ரீ
நடித்த
ஊருக்கு உழைப்பவன்

சாந்தி (யாழ். நகர்) போன்: 7543
தினசரி 10-30, 2-30, 6-30, 9 45
சிவகுமார், முத்துராமன், ஜெயசித்ரா, சோ.
எங்கம்மா சபதம்
மே 20ம், 22ம் திகதிகளில்
காலை 8-30 மணிக்காட்சிமட்டும்
CIRCUS
—color—

வின்னர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன்
நடித்த
ஜானகி சபதம்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் — ஜெயலலிதா
(இருவேடம்)
நடித்த
வந்தாளே மகராசி
(புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள் வெற்றிகரமான 3வது வாரம்
முத்துராமன் — சந்திரகலா
நடித்த
காலங்களில் அவள் வசந்தம்
உலகச் செய்திகளும் காண்பிக்கப்படும்
(கலர்)
Also Showing World news,
Soccer—Germany vs. Italy — World Cup Tournament — Motor Cycle Display. (All in Colour)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம்
(கலர்)

லிடோ போன்: 7692
(யாழ். நகர்)
ஜெமினி-சாவித்திரி
கடன்வாங்கிக் கல்யாணம்

ராணி
(யாழ் நகர்)
காட்சிநேரங்கள் குறிப்பிடமுடியாமைக்கு வருந்துகிறோம்
சிவாஜி — மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

நினைவாஞ்சலி

## திருநாவுக்கரசு

ஈவதும் இசைபடவாழ்வதும் தான் வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்கவேண்டும் என்று அடிக்கடி சொல்வதோடு அவ்வாறே வாழ்ந்துங்காட்டிய அமரர் திருநாவுக்கரசு, சட்டத்தரணி, சமாதான நீதிபதி அவர்கள் பிறப்பறுத்துப்போய் விட்டார்.

சுதுமலை பேராயிரமுடையான் பன்னுடன் பெருமான் வம்சத்தில் பிறந்த சோமசுந்தரம் ஆனைக்கோட்டை மாணு முதலி வழித்தோன்றல் நாகம்மா தம்பதிகளின் புத்திரரான இவர், தனது ஆரம்பக் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை கொழும்பு ஆனந்தாக் கல்லூரியிலும் கற்றுத்தேறி தனது பட்டப்படிப்பை கொழும்பு சர்வகலாசாலையிலும்பெற்றார். கல்வியில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமின்றித் திகழ்ந்த அமரர் 1932ம் ஆண்டு லண்டன் பி. ஏ. பரீட்சையில்தேறினார்.

அதன்பின்னர் 1934ல் ஆண்டு சட்டக்கல்லூரியில் சேர்ந்து 1937ல் சட்டத்தரணியாக வெளிவந்தார். சட்டத்தரணியாகி நாற்பதாண்டுகள் நற்சேவை செய்து சமீபத்தில்இச் சேவையிலிருந்தும் தாமாகவே ஓய்வுபெற்றார்.

சட்டத்தரணியாக இருந்தும் சட்டத்துறையில் மட்டும் கவனம் செலுத்தாது தமிழ் இலக்கியத்திலும் சைவசித்தாந்த ஆய்விலும் தன்னை ஈடுபடுத்தினார்.

எவ்வகையானபகிரங்க வைபவங்களிலும் அமரர் கலந்து கொண்டாலும் அங்கு அவர் சுவைபடப் பேசாமல் இருக்கமாட்டார். பேச்சில் சொல் நயமும் பொருள்வளமும் நகைச்சுவையும் இசைந்து செல்லும். இராப்போசன விருந்துகளில் அமரர் பேச எழுந்தாரானால் அங்குள்ளோர் வயிறு குலுங்கச் சிரிக்க இன்று நல்ல சிரிப்புவிருந்தும் உண்டோம் என மகிழ்வர்.

அமரரின் அருஞ் சேவையை மதித்த அரசாங்கம் 1955 மாசி மாதம் சமாதான நீதிபதிப்பட்டம் சூட்டியது. தமக்கு ஒருவருக்கு இப்பட்டம் கிடைத்ததாக மகிழ்ந்த ஆனைக்கோட்டை இ. மு. சங்கமும் ச. ச. நிலையமும் அன்னாருக்கு பாராட்டுவிழா எடுத்துச் சிறப்பித்தது.

இலனேசச் செல்வராய்-வித்துவ சிரோமணியாய், உண்மைக்கு உறைவிடமாய், நேர்மைக்கும், பண்புக்கும் பாத்திரமாய் ஈகை, இரக்கம் நிறைந்தவராய், அன்பர்களும் இருமகளும் ஒருங்கிணைந்த வெற்றியராய் வாழ்ந்த அமரர் 28-4-78 வெள்ளி இரவு 9 மணியளவில் நோயுற்றிருக்காமல் திடீரென இம்மை வாழ்வினை நீத்து அம்மைபாதமடி சேர்ந்தார்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைவதாக.

புத்தொளி

## பாராட்டுப் பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 11ம் திகதி முதல் 15-ம் திகதிவரை நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றுவந்த ஞானசம்பந்தர் விழாவில், வண்ணை வீரமாகாளியம்மன் கூட்டுப்பிரார்த்தனைச் சபை சார்பில் பல மாணவ, மாணவிகள் சமயஉரை நிகழ்த்தினர்கள்.

எஸ். ரவிசங்கர், இ. ராஜகாந்தன், ஜே. ஜெயபாலேந்திரன், கே. சிவலிங்கம், செல்வி எஸ். சுதர்சனி ஆகியோர் சிறப்பானமுறையில் உரை நிகழ்த்தி பாராட்டைப் பெற்றுக்கொண்டனர்.

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி
6-45, 10-00
எல்.எஸ்.ஆர்.விஜயகுமாரி
நடித்த
குமுதம்

# கருணாரத்ன கொலை; மூவருக்கு பிணை அனுமதி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் கருணாரத்ன கொலை தொடர்பாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த நால்வரில் மூவர் பிணையில் விடப்பட்டனர்.

இக்கொலை தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த எம். யோகசம்பந்தன், அ. தருமகுலசிங்கம், த. இந்திரலிங்கம், வி. சந்திரலிங்கம் ஆகியோரில் யோகசம்பந்தன் தவிர ஏனையோரை பிணையில் விடலாம் என்று பகிரங்க வழக்குத் தொடருனர் பருத்தித்துறை நீதவானுக்கு அறிவித்ததையடுத்து இம்மூவரும் பிணையில் விடப்பட்டனர்.

இம்மூன்று சந்தேக நபர்களும் தலா ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

# "தமிழ்த் தொழிலாளர் ஒரு கொடியின் கீழ்வரவேண்டும்"

(கொழும்பு)

"கடந்த காலங்களில் தமிழ்த் தொழிலாளர்கள், சிங்களவர்களுடன் ஒன்றிணைந்து ஒரு கொடியின்கீழ் தொழிற்சங்க உரிமைகளையும், தமிழினத்தின் உரிமைகளையும் பெற ஒன்றிணைந்தார்கள். இந்நிலைமை, இந்தநாட்டில் ஒரே தேசிய இனம் மட்டுமே வாழ்கின்றது என நினைத்து 1956ம் ஆண்டு தனிச்சிங்களச்சட்டம் அரசினால் கொண்டுவரப்பட்ட அன்றே இல்லாமல் போய்விட்டது. இதுமட்டுமல்லாமல், நாளடைவில் தமிழ் தேசிய இனத்தை அழிக்கவும் சிங்கள ஆட்சியாளர்கள் முனைந்து வந்துள்ளனர். இந்நிலையில்தமிழ்த் தொழிலாளர் மொழிவழியாகப்பிரிந்து, மொழிவழித் தொழிற்சங்கங்களை அமைத்து செயல்படுவதனை ஒருகொடியின்கீழ் தமிழ்மொழிதொழிற்சங்கத்தை உருவாக்கினர்' என்று கடந்தவாரம் கொழும்பு அரசாங்க எழுதுவினைஞர் சங்க கட்டடத்தில் நடைபெற்ற இலங்கை அஞ்சல் தொலைத்தொடர்பு சங்க கொழும்புக் கிளையை ஆரம்பித்துவைத்துப் பேசிய அரசாங்க எழுதுவினைஞர் சங்க செயலாளர் திரு க. சோதிலிங்கம் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்கு இலங்கை அஞ்சல்தொலைதொடர்பு சங்க தாய்ச்சங்க செயலாளர் திரு. இ. செல்லத்துரை தலைமை வகித்தார்.

திரு. க. சோதிலிங்கம்தொடர்ந்து உரையாற்றுகையில், 'இன்று எமது தமிழ்த் தொழிலாளர்களிடையே ஒற்றுமை வளரவில்லை. எமது இனம், எமது எதிர்காலம் ஆகியவற்றை எண்ணியாவது தமிழ் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு எமது இனத்தின் விடுதலைக்காகப் போராடவேண்டும்" என்றார்.

தலைமை வகித்து உரையாற்றிய திரு. இ. செல்லத்துரை, 'மொழிவழித் தொழிற்சங்கங்களில் தமிழ்த் தொழிலாளர்கள் அங்கம் வகிக்கவேண்டிய அவசியத்தைவிளக்கிக்கூறினார்.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்: இ. சிவம் (கொழும்பு மத்திய பரிவர்த்தனை நிலையம்), உபதலைவர்: க. கணபதிப்பிள்ளை (பிரதம தபால் நிலையம்), செயலாளர்: செ. சிவப்பிரகாசம் (அஞ்சல்அலுவலகம், பம்பலப்பிட்டி), உபசெயலாளர்: தி. சண்முகநாதன் (பிரதம தபால்நிலையம்), பொருளாளர்: து. கிளிநிறல், உபபொருளாளர்: ஆ. வேலாயுதம் (பிரதம தபால்நிலையம்), செயற்குழு உறுப்பினர்கள்: செ. கந்தசாமி, மு. மனோகரன், ம. மரியதாசன், பூரணி. சுவாமிநாதன், செ. அன்ரன், க. குணரெட்னம். (செ)

## கொலைமுயற்சி வழக்கு: எதிரிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கம்பர்மலை கொலைமுயற்சி வழக்கில் விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலைசெய்யப்பட்டனர். இவ்வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு ஜேசுரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 77 பெப்ரவரி 18ம் தேதி கம்பர்மலையில் செல்லத்துரை சரோஜாதேவியை அடித்து கிணற்றில் தள்ளி கொலைசெய்ய முயற்சித்ததாக கந்தசாமி இராசம்மா, இரத்தினேஸ்வரி கந்தசாமி, நகுலேஸ்வரி இவராசா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணி எஸ். முத்துக்குமாரசாமியின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி எஸ். கனகரத்தினம் ஆஜரானார். (ச)

## பிணையில் செல்ல அனுமதி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இ. போ. ச. திருட்டுச் சம்பவம் தொடர்பாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த மனுவேற்பிள்ளை ஜேசுதாசன் இரண்டாயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவில் மெக்கானிக்காக கடமையாற்றிய இவர், பருத்தித்துறை நீதவான் திரு கெங்காதரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோதே பிணைக்கான அனுமதி வழங்கப்பட்டது.

சந்தேக நபரை அடுத்தமாதம் 21ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## வானொலியில் அஞ்சலகுட்!

(பண்டத்தரிப்பு)

வைகாசி விசாகதினமான 21-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் ஆலய இரதோற்சவ நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேரடியாக அஞ்சல் செய்யவிருக்கின்றது.

இதுதொடர்பாக அளவெட்டியைச் சேர்ந்த ஐக்கிய தேசியக்கட்சிப் பிரமுகர் திரு. எஸ். கே. என். இவராசா இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவருடன் அண்மையில் நடாத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்த அஞ்சல் நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## கொட்டடி வைரவர் பொங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடி ஸ்ரீ பாலஞான வைரவசுவாமி கோயில் வைகாசி விசாகப் பொங்கல் விழா 21ம் திகதி நடைபெறும்.

சிறப்புநிகழ்ச்சிகளாக அன்று மாலை ஈழநல்லூர் ஏ. ஆர். மார்க்கண்டு குழுவினரின் மேளக்கச்சேரியும் செல்வி நல்லபிள்ளை நாகமுத்துவின் சிறப்புரையும், 'தமிழ்மணி' எஸ். கணேசசுந்தரனின் கதாப்பிரசங்கமும் பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ணனின் சிறப்புரையும் இடம்பெறும்.

## கூட்டுறவு ஊழியர் மேன்முறையீடு

# ஐந்து மணித்தியாலத்தில் பத்து விசாரணைகள் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியரின் 10 மேன் முறையீடு விசாரணைகள் 5 மணித்தியாலங்களில் முடிவடைந்தது.

இவ்விசாரணை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சட்டத்தரணி எஸ். ஏச். எம். சகிது முன்னிலையில் நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி 2 மணிக்கு முடிவடைந்தது.

மேன்முறையீடு செய்த 10 ஊழியர்களும் ஆஜராகி சாட்சியமளித்தனர். இவர்கள் சார்பில் முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர்களான திரு. எஸ். சந்தசாமி, திரு. எஸ். நாகலிங்கம் ஆகியோர் ஆஜராகினர்.

சம்பந்தப்பட்ட 10 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சார்பில் சங்கப் பிரதிநிதிகளும் ஆஜராகியிருந்தார்கள்.

மேன் முறையீடு செய்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களான கீழ்க்காணுவோர் சாட்சியமளித்தனர்.

எஸ். பாலலிங்கம் (கோண்டாவில்), வி. ஞானேஸ்வரன் (வேலணை), கெ. வரதராஜன் (வேலணை), எஸ். இளையதம்பி (கரவெட்டி), எஸ். திருநாவுக்கரசு (திருநெல்வேலி), எஸ். கே. அம்பலவாணர் (யாழ்ப்பாணம்), எஸ். சிவலிங்கநாதன் (கொக்குவில்), பி. சரவணமுத்து (மாதகல்), எஸ். முத்துவேலு (புங்குடுதீவு), ரி. குகதாசன் (புத்தூர்)

## கெருடாவில் கொலை வழக்கு இன்று தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

கெருடாவில் கொலை வழக்கு தீர்ப்பு இன்று காலை வழங்கப்படவிருக்கிறது.

இவ்வழக்கு நேற்று யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல் காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 76 செப்டம்பர் 28ம் கெருடாவில் சின்னத்தம்பி சின்னப்பா என்பவரை கொலை செய்ததாக அவரது மகன் சின்னத்தம்பி கார்த்திகேசு மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலன், சட்டத்தரணி எஸ். தேவராசா, சட்டத்தரணி செல்வி நிமலினி திரேசு ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி ஜி ஜெயக்குமார் வழக்கை நடத்தினார்.

நேற்று சாட்சியங்கள் முடிவடைந்ததும் அரசதரப்புச் சட்டத்தரணி ஜி. ஜெயக்குமாரும், எதிரியின் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும் தொகுப்புரை நிகழ்த்தினார்கள்.

இன்று காலை நீதிபதி உரை ஜூரிசபையினருக்கு நிகழ்த்துவார். அதன்பின் தீர்ப்பு வழங்கப்படும். (ஈ)

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வண்ணை இல்லர் ஒழுங்கையிலுள்ள ஸ்ரீமகா மாரி அம்பாள் கோவில் வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகின்றது.

23ம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பரத் திருவிழாவும், 26ம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும் 27ம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

உற்சவகாலங்களில் தினமும் 7-15 முதல் 8-15 வரை தமிழ்மணி திரு வி எஸ். கணேசசுந்தரத்தின் கதாப் பிரசங்கமும் இடம்பெறும். (ஈ)

## 'இந்திரா அரசியலில் தலைதூக்கார்'

புதுடில்லி, மே 18

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அரசியலில் மீண்டும் தலைதூக்குவார் என நாம் எதிர்பார்க்கவில்லை.

இவ்வாறு மார்க்ஸிஸ கம்யூனிஸ் கட்சிப் பொதுக்காரியதரிசி திரு. ஏ. எம். எஸ். நம்பூதிரிபாட் தெரிவித்தார். (இ)

## 2வது பத்திரிகைக் கமிஷன்

புதுடில்லி, மே 18

இந்தியாவில் 2வது பத்திரிகைக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர் தலைமையில் 9 உறுப்பினர்கள் இக்கமிஷனில் அங்கம் வகிக்கின்றனர். (இ)

## ஏறாவூர் வங்கிக் கொள்ளை: மேல்நீதிமன்றம் விசாரிக்கும்

(மட்டக்களப்பு)

ஏறாவூர் வங்கிக் கொள்ளை வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. சி. மனோகரா முன்னிலையில் சந்தேகநபர்களான ஆர். பரமதேவா, வி விஜயசுந்தரம், ரஞ்சன் கனகரத்தினம் ஆஜர் செய்யப்பட்டனர்.

மாவட்ட நீதிபதி இவ்வழக்கு மேல்நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படும் எனத் தெரிவித்தார்.

சந்தேகநபர்களை இம்மாதம் 23ம் திகதி ரிமாண்டில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (ஈ)

## வாராந்தக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின், வாராந்தக் கருத்தரங்கு நாளை மாலை 6 மணிக்கு தமிழர் விடுதலைக்கூட்டணி பணிமனையில் நடைபெறும். கருத்தரங்கிற்கு யாழ்ப்பாண எம். பி. திரு வெ. யோகேஸ்வரன் தலைமை தாங்குவார்.

இக்கருத்தரங்கில் முன்னாள் கடற்றொழில் ஆராய்ச்சி உதவியாளர் திரு. க. சச்சிதானந்தன் "தமிழ் ஈழத்தின் பொருளாதாரம்" என்னும் தலைப்பில் இரண்டாவது ஆராய்ச்சி உரையை நிகழ்த்துவார். (கெ- இ)

## கூட்டணி மாதாந்த கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி உள் - ஈட மேற்கு கிளையின் மாதாந்தக் கருத்தரங்கு கிளை அலுவலகத்தில் நடைபெறுகிறது.

சட்டத்தரணி இ. விசுவநாதன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை, திரு. கரிகாலன், திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோர் உரை நிகழ்த்துவர். (இ)

# பல வழக்குகளில் தேடப்பட்டவர் தற்கொலை

(சங்கானை)

மூன்று பிள்ளைகளின் தந்தையும் பல வழக்குகள் தொடர்பாக பொலிசாரால் தேடப்பட்டு வந்தவரும் இம்மாதம் 17-ந் திகதி வழக்கொன்றிற்குச் சமுகமளிக்காதமையால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்தவருமான சங்கானை இழக்குநிற்சாமத்தைச் சேர்ந்த பொன்னன் குணம் (வயது 30) நச்சுத்திராவகமருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை பகல் சுமார் 11-30 மணியளவில் மாலியவத்தை ஒழுங்கையில் நடைபெற்றது.

சம்பவதினம் குணம் சகோதரர்களுடன் வாக்குவாதப்பட்டுக்கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சங்கானை சந்தைப்பக்கம் சென்றுவிட்டு வீடு திரும்பியபோது வழியில் அறிவிழந்து விழுந்து மரணமானார் என்று கூறப்பட்டது. அயலவர்கள் எடுத்த முயற்சியும் பலனளிக்கவில்லை.

மரணவிசாரணையில் சங்கானைப் பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. சிவபாதசுந்தரம் சாட்சிகளை ஆஜர் செய்தார். இறந்தவரின் தந்தை பொன்னன், மனைவி இராசமணி ஆகியோர் வாக்குமூலங்களைப் பதிவு செய்த மரணவிசாரணை அதிகாரி சமாதான நீதவான் அல்போன்ஸ் அந்தோனியார் மரணவிசாரணை நடத்தினார். டாக்டர் டபிள்யு சிவநாதன் பிரேதபரிசோதனை நடத்தியபின் தற்கொலை எனத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

## தோட்டத்தில் துப்பாக்கி; பொலிசார் கைப்பற்றினர்

(மட்டுவில்)

எழுதுமட்டுவாள் பகுதியில் அண்மையில் பொலிசார் வீடுகளில் சோதனை நடத்திய போது தோட்டம் ஒன்றில் ஒருவரிடம் துப்பாக்கி ஒன்று பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

எழுதுமட்டுவாளிலுள்ள எமிலிசன் தென்னம் தோட்டத்திலேயே இந்த துப்பாக்கியும் மூன்று தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டன.

அந்தத் தோட்டத்தில் கணக்கப்பிள்ளையாக இருந்த நபர் தம்பு என்பவரைப் பொலிசார் கைதுசெய்து சாவகச்சேரி மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர்செய்தனர். நீதிபதி சந்தேகநபரை பிணையில் செல்ல அனுமதித்து மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

## அமிர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இம்மாதிரியான சட்டங்கள் அரசியல்காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படலாகாது என்றார்.

### நல்லூர் சிவா

நல்லூர்த் தொகுதி மேரவை உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரம்சட்டமூலங்களைஎதிர்த்துப் பேசும்போதுகுற்றவியல் சட்டத்துக்கே இவை முரண்பாடாக இருக்கின்றன என்றார். இந்தச் சட்டங்களின் மூலம் பொலிசாருக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படுகின்றது என்றார் அவர்.

### அமிர் எதிர்ப்பு

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசும் போது விளக்கமறியலில் வைக்கப்படுகின்றவர்களைப் பிணை எடுப்பதற்கு உயர்நீதிமன்றத்துக்கு வரமுடியாத சாதாரண மக்கள் இச் சட்டங்களால் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்றார். பிணையில் விடும் உரிமை நீதிமன்றங்களிடமிருந்து பறிக்கப்படுவதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி எதிர்க்கட்சியினருக்கும் பதிலளித்துப் பேசுகையில் கைது செய்யப்படும் நபர்களைப் பிணையில் விடும் உரிமை பறிக்கப்படவில்லை. இந்த உரிமை உயர் நீதிமன்றத்தால் வழங்கப்படுகிறது என்றார்.

கம்பஹா எம். பி. திரு. எஸ் டி. பண்டாரநாயக்கா, நுவரேலியா - மஸ்கெலியா தொகுதி மூன்றாவது உறுப்பினர் திரு. எஸ். தொண்டமான் ஆகியவர்களும் சட்டமூலங்களை எதிர்த்துப் பேசினார்கள்.

## அச்சுவேலி கொள்ளை வழக்கு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச்சங்க கொள்ளை வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் இன்றுகாலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. (ஈ)

## அதிகாலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அலுமாரிகள், சூட்கேசுகள் ஆகியனவும் வீட்டார் முன்னிலையில் சோதனையிடப்பட்டன. (உ)

### கரவெட்டியில்

(நெல்லியடி)

இன்றுகாலை கரவெட்டிப்பகுதியில் ராணுவமும் பொலிசும் திடீர்சோதனைகளை நடத்தினர். காலை 7-15 மணியளவில் நெல்லியடி கரவெட்டிப் பகுதிகளுக்கு மேலாக மிகவும் தாழ்வாக ஹெலிகாப்டர் பறந்தவண்ணம் இருந்ததையும் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று பார்த்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

## இருவரைத் தேடி

# கடலுக்குச் சென்ற மேலும் 8 மீனவரையும் காணோம்

(திருகோணமலை)

திருகோணமலை வெருகல் பகுதியிலிருந்து கடலில் மீன் பிடிக்கச் சென்ற இரு மீனவர்களைத் தேடிச் சென்ற 8 மீனவர்களையும் காணவில்லை என்று அறிவிக்கப்படுகிறது. இவர்கள் கேட்டபடி இருவரையும் தேடி இயந்திரப்படகில் சென்றனராம்.

இவர்கள் பற்றிய தகவல் தெரிந்தோர் திருகோணமலை பொலிசாருக்கு தகவல்தருமாறு கோரப்படுகின்றனர். (உ)

## இன்று

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

# கார்-லொறிவிபத்து இளைஞர் மரணம்

(மட்டுவில்)

கார் ஒன்று லொறி ஒன்றுடன் மோதியதைத் தொடர்ந்து காரிலிருந்த வாலிபர் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமடைந்தார்.

இந்த பரிதாப சம்பவம் பளையில் நடைபெற்றுள்ளது. இந்தக் கார் முத்துஐயன்கட்டிற்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்ததாம்.

இந்தவிபத்தில் மரணமடைந்தவர் பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த ஒரு வாலிபர் என்று தெரிகிறது. பளைப் பொலிசார் இந்த விபத்து பற்றிய புலன்விசாரணையை நடத்திவருகிறார்கள்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மே மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram "Eenaadu" Telephone 389. Registered as a Newspaper in SriLanka.